**செய்தி வெளியீடு எண்:244** **நாள்: 07.07.2012**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.7.2012

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேற்கு ஆயக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. முகமது இஸ்மாயில் என்பவரின் மகன் ரத்தினம் முகமது என்பவர் **6.7.2012** அன்று வரதமாநதி அணைப்பகுதியிலுள்ள பள்ளிவாசலுக்கு செல்லும் போது, காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த திரு. ரத்தினம் முகமது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான ரத்தினம் முகமதை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**